24th March 1961]

Grant of patta

* 1042 *Q.*—Sri T.S. RAMASWAMI (on behalf of Sri P. S. CHINNA-DURAI) : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா நெ. 149 கிராமத்தில் சர்வே நெ. 217/3-ஐச் சேர்ந்த சில நிலங்களைப் பட்டா செய்வது பற்றி 1961-ம் ஆண்டு ஜனவரிமீ 5-ந் தேதியிட்ட மகஜர் ஒன்று சர்க்காருக்கு வந்ததா ?

(இ) அப்படியானல், அதன்மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Slum clearance (City)

* 1043 *Q.*—Sri T. T. DANIEL :
Sri K. SATTANATHA KARAYALAR : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have any scheme for the clearance of slums in Madras City ;

(*b*) if so, the details thereof ;

(*c*) how much amount the Government propose to allot in the Third Five-Year Plan for the scheme; and

(*d*) how many houses the Government intend to construct in the Third Five-Year Plan under this scheme?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) *to* (*d*) A statement [a] is placed on the table of the House.

Sri A. A. RASHEED : May I know the steps taken by this Government to prevent new slums appearing in Madras City?

The Hon. Sri R. VENKATARAMAN : We have passed the law relating to eviction of unauthorized occupants from public premises.

Sri P. G. MANICKAM. : ஸார், மேசை மீது வைக்கப்பட்டிருக்கும் குறிப்பிலே 300 லட்சம் ரூபாய், மூன்றுவது திட்டத்திற்கு, "சென்ட்ரல் ஒர்க்கிங் க்ரூப் ஆன் ஹௌஸிங்" கொடுக்க ஒத்துக் கொண்டிருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது சென்னை நகரத்திற்கு மட்டுந்தானு அல்லது இதர நகரங்களில் உள்ள சேரிகளுக்கும் சேர்த்தா ? இல்லையென்றுல், இதர நகரங்களுக்கும் சேரி சீரமைப்பை விஸ்தரிக்க என்ன ஏற்பாடு செய்யப் போகிறுர்கள் ?

The Hon. Sri R. VENKATARAMAN : மூன்றுவது திட்டத்தின் கீழ் 3 கோடி ரூபாய்கள் செலவழிக்கப்படும். அது ராஜ்யம் பூராவுக்கும் தான், சென்னை நகரத்திற்கு மட்டுமல்ல. முக்கியமான நகரங்களிலெல்லாம் சேரி ஒழிப்புத் திட்டம் அமுல் நடத்தப்படும்.

Sri S. RANGANATHA MUDALIAR : In view of the fact that slum areas are so insanitary, would the Government think of appointing a special sanitary staff to look to sanitation in slum areas, until they are cleared?

---

a Printed as Appendix I on pages 542–543 infra.

THE HON. SRI R. VENKATARAMAN : I do not think the suggestion is feasible. There are slums because there is overcrowding. Unless overcrowding is removed, this cannot be improved.

SRI K. B. S. MANI : சேரி ஒழிப்பின் மூலமாக வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்படும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் ; அது அதிக தூரத்தில் அமைந்தால், தொழில் நிலையத்திற்குப் போக வர அவர்களுக்கு கஷ்டம் ஏற்படுவதால் அம்மாதிரி இடங்களுக்குப் போக மறுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சமீபத்திலேயே, சுகாதார வசதிகளோடு கூடிய கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? அந்த முறையில் சேரி ஒழிப்புச் செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சேரி ஒழிப்புக்காக வேறு இடங்களில், திறந்த வெளியிலே, குறைந்த வாடகையில், மாதம் 3 ரூபாய் என்று போட்டு, பாத் ரூம், ப்ளஷ் ஔட் போட்டுக்கொடுத்தால், அது தொலைவில் இருக்கிறது என்று போகமாட்டோம் என்கிறார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் கட்டிக் கொடுத்து, வாடகை ரூ. 10 என்றால், அது அதிகம் என்று போகமாட்டோம் என்கிறார்கள்.

SRI K. PERIANNAN : தற்போது எந்தெந்த ஜில்லாவில் இந்த சேரி ஒழிப்புத் திட்டம் அமுலில் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது இல்லை; மூன்றாவது திட்டத்தில் என்று சொன்னேன்.

SRI N. MARUDACHALAM : சேரி ஒழிப்பு கோவை நகரத்திற்குக் கொண்டு வரப்படுமா ? அப்படிக் கொண்டு வர எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : கோவை நகரமும் கூட சேர்க்கப்பட்டிருக்கிறது. இது மெட்றாஸைப் பொருத்த கேள்வி.

Beating of one Chockalingam (Central Jail, Tiruchirappalli).

* 1044 *Q*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 24—11—60-ல் திருச்சி மத்திய சிறையில் பஞ்சாயத்து போர்டு அங்கத்தினரான சொக்கலிங்கம் என்பவரை ஜெயில் அதிகாரிகள் தடியால் தாக்கி காயப்படுத்தியது உண்மையா ?

(இ) காரணமென்ன ?

(உ) தாக்கியவர்களின்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

SRI V. K. KOTHANDARAMAN : திருச்சி மத்திய சிறையில் சொக்கலிங்கத்தை தாக்கிக் காயப்படுத்தியதாக அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும் பல புகார்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கத்திற்கு வரவில்லை. அதிகாரிகளை விசாரித்ததில், புகாருக்கு ஆதாரம் இல்லை என்று தெரிந்தது. 24-ம் தேதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அன்றைக்கு அவர் சிறைக்கே வரவில்லை; பின் தேதியில்தான் வந்தார். சிறையில் அவருக்கு வைத்திய